# மெரிடியன் ஹெல்த்தில் வழங்கப்படும் நிதியுதவித் திட்டங்கள்

மெரிடியன் ஹெல்த், காப்பீடற்ற நோயாளிகளுக்கு நிதியுதவித் திட்டங்களை வழங்குகிறது. காப்பீடற்ற நோயாளி என்பவர், அரசாங்கத் திட்டம் உள்ளிட்ட எந்தவித மருத்துவக் காப்பீடும் இல்லாத ஒரு நபர் ஆவார்.

**நிதியுதவியை எவ்வாறு பெறுவது:**

**சூழல் 1:** உங்களுக்கு எந்தவித காப்பீடும் இல்லாத சூழலில்.

- வருடாந்திர சேர்க்கையின் போது, www.healthcare.gov என்ற இணையதளத்தில் மருத்துவக் காப்பீட்டு நிலையங்களின் மூலம் காப்பீட்டுக்காக நீங்கள் விண்ணப்பிக்கலாம்.
- உங்கள் ஆண்டு வருமானம் அரசாங்க வறுமைக்கோட்டு நிலையைக் (FPL) காட்டிலும் 138% -க்கு சமமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கும் பட்சத்தில், நீங்கள் நியூஜெர்சி மாநில மருத்துவ உதவித் திட்டத்திற்கு (State of NJ Medicaid Program) தகுதி பெறலாம். மருத்துவமனையால் கோரப்படும் பட்சத்தில், மருத்துவ உதவிக்கு நீங்கள் விண்ணப்பித்து, விண்ணப்ப செயல்முறையில் முழுமையான ஒத்துழைப்பை அளித்து, உங்கள் மருத்துவ உதவிக் காப்பீட்டை ஆண்டுதோறும் புதுப்பிக்க வேண்டும்.

**சூழல் 2:** நீங்கள் மருத்துவ உதவிக்கு விண்ணப்பித்து, அது மாநில அரசால் நிராகரிக்கப்படும் சூழலில் அல்லது மருத்துவக் காப்பீட்டு நிலையம் மூடப்பட்ட சூழலில்.

- மருத்துவ சேவைகளுக்கான செலவுகள் மற்றும் சிறப்பு மருத்துவர் வருகைகளை உள்ளடக்குகின்ற நியூஜெர்சி மருத்துவமனை சிகிச்சை கட்டண உதவித் திட்டத்துக்கு (NJ Hospital Care Payment Assistance Program) நீங்கள் தகுதி பெறலாம். இந்தத் திட்டத்தில் கருதப்படுவதற்கு, நீங்கள் சேரிட்டி கேர் அப்ளிகேஷனை பயன்படுத்தி விண்ணப்பித்து, விண்ணப்ப செயல்முறையில் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும். பொதுவாக பில் செய்யப்படும் தொகைகளை விட அதிகமாக உங்களுக்கு கட்டணம் விதிக்கப்படமாட்டாது.

**சூழல் 3:** நீங்கள் மருத்துவ உதவி அல்லது நியூ ஜெர்சி மருத்துவ சிகிச்சை கட்டண உதவித் திட்டத்திற்கு தகுதி பெறாத சூழலில்.

- மருத்துவ உதவி அல்லது நியூ ஜெர்சி மருத்துவ சிகிச்சை கட்டண உதவித் திட்டங்களுக்கு நீங்கள் தகுதி பெறாத பட்சத்தில், காப்பீடற்ற கட்டணத்தை தள்ளுபடி விகிதத்தில் நீங்கள் பெறுவீர்கள். அவசரகால சேவைகள் அல்லது பிற மருத்துவத் தேவை கொண்ட சேவைகளுக்கு, பொதுவாக பில் செய்யப்படும் தொகைகளை விட அதிகமாக உங்களுக்கு பொதுவாக கட்டணம் விதிக்கப்படமாட்டாது. மேலும் அவசர சேவைகளைப் பெறுவதற்காக, நீங்கள் முன்பணம் செலுத்தவோ அல்லது பிற பண செலுத்தல்களைச் செய்யவோ தேவையில்லை. அவசரகால சேவைகள் அல்லாத சேவைகளைப் பெறுவதற்கு நீங்கள் முன்பண வைப்புத்தொகையை செலுத்தவேண்டி இருக்கலாம்.

Meridianhealth.com என்ற இணையதளத்தில் உள்ள நிதியுதவி தேவையா? என்ற பக்கத்தின் "உங்கள் பில்" என்பதன் கீழ், மெரிடியன் ஹெல்த்தின் நிதியுதவிக் கொள்கை மற்றும் விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெறுகின்றன. அனைத்து மெரிடியன் மருத்துவமனைகளிலும் அல்லது 732.902.7080 என்ற எண்ணுக்கு அழைப்பதன் பேரிலும் இலவசப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

## நிதி ஆலோசகர்கள்:

மெரிடியன் ஹெல்த் நிதி ஆலோசகர்கள், நிதியுதவித் திட்டங்கள், விண்ணப்ப செயல்முறை பற்றிய தகவலை அளிப்பதற்கும், விண்ணப்பங்களை நிரப்பித் தருவதற்கும் உதவுவர். பின்வரும் இடங்களில் மெரிடியன் ஹெல்த் நிதி ஆலோசகர்கள் அமைந்துள்ளனர்:

Jersey Shore University Medical Center, Neptune
Ocean Medical Center, Brick
Riverview Medical Center, Red Bank
Southern Ocean Medical Center, Manahawkin
Bayshore Community Hospital, Holmdel
Meridian Family Health Center, Neptune
Jane H Booker Family Health Center, Neptune
Booker Behavioral Health Center, Shrewsbury
Parkway 100 Behavioral Health Center, Neptune
Raritan Bay Medical Center, Perth Amboy

நேரில் சந்தித்துப் பேசுவதற்க்கும், கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கும் மேற்கண்ட இடங்களில் நிதியுதவி ஆலோசகர்கள் கிடைக்கப்பெறுகின்றனர். முன்பதிவை செய்வதற்கு, விண்ணப்பதாரர்கள் **732 212-6505 என்ற எண்ணில் அழைக்கவும்.**

## உங்கள் நிதியுதவி முன்பதிவுக்கு என்னென்னவற்றை கொண்டுவர வேண்டும்:

நிதியுதவி விண்ணப்பதாரர்கள் அடையாள அட்டை, நியூஜெர்சியில் வசிப்பதற்கான வசிப்பிடச் சான்று, வருமானச் சான்று மற்றும் வங்கி அறிக்கைகளை வழங்க வேண்டும்.

## விண்ணப்ப முடிவின் அறிவிப்பு:

அனைத்து விண்ணப்பதாரர்களும், விண்ணபித்த **10** வர்த்தக நாட்களுக்குள் தங்களின் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதா என்பதற்கான எழுத்துப்பூர்வ அறிவிப்பை, முடிவுக்கான விளக்கத்துடன் பெறுவர்.